# மயிலிட்டியில் பிள்ளையார் கோவில் தேர் எரிப்பு

பக்கங்கள் நான்கு · விலை ரூபா:- 4-00

# முரசொலி

முரசு 05 ஒலி 07 பிரமோதூத கார்த்திகை 18 (04-12-1990) செவ்வாய்

## வைரவர் கோவிலும் சேதம்

மயிலிட்டி வடக்கில் இராணுவத்தினரால் இரண்டு இந்துக் கோவில்களும், பல லட்சம் ரூபா பெறுமதியான கோவில் சொத்துக்களும் நாசமாக்கப்பட்டுள்ளன. மயிலிட்டி வடக்கு கொழுவியன் கலட்டி பிள்ளையார் கோவில் தரை மட்டமாக்கப்பட்டுள்ளதாகவும் அதன் இருபத்தைந்து இலட்சம் ரூபா பெறுமதியுடைய தேர் முற்றாக எரிக்கப்பட்டுள்ளதாகவும் அறியவந்துள்ளது. தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் தேர் போன்ற அமைப்புடைய இப்பெறுமதி வாய்ந்த தேர் எரிக்கப்பட்டதுடன் கோவில் ஐயர் தங்கும் வீடும் கோவில் மடைப்பள்ளியும் எரிக்கப்பட்டுள்ளன. இக்கோவிலுக்கு ஏற்பட்டுள்ள சேதம் எழுபத்தைந்து லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்துடன் கட்டைக்காடு வைரவர் கோவிலும் சேதமானது. (32)

★ வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்

# நிர்வாகச் சீர்கேடு:

# பல லட்சம் நட்டம்

## ஐஸ் தொழிற்சாலை ஸ்தம்பிதம்

**வடக்கிலிருந்து கடலுணவைப் பெருமளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, வருடாவருடம் பல லட்சம் ரூபா அந்நியச் செலாவணியைச் சம்பாதித்து வந்த கூட்டுறவு அமைப்பு ஒன்று நிர்வாகச் சீர்கேட்டால் பல லட்சம் ரூபா நஷ்டமடைந்துள்ளது.**

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் கடலபடு திரவியங்களான சங்கு, கடல் அட்டை, இறால், நண்டு முதலிய பொருள்களை ஏற்றுமதி செய்து வந்துள்ளது.

வடபகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கென இயங்கும் மிகப்பெரிய கூட்டுறவு அமைப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இச்சமாஜத்தால் கடற்றொழிலாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பெருமளவு சங்குகள் ஏற்றுமதி செய்யப்படாமல் தேங்கிக்கிடக்கின்றன.

யாழ் நகர்ப்பகுதியில் உள்ள மேற்படி களஞ்சியமும் விமானத்தாக்குதலால் சேதமடைந்துள்ளது. பெருமளவு சங்கும் ஏற்றுமதிக்கு உதவாத நிலையில் உள்ளதாக அறியப்படுகிறது.

சங்குகளைச் சேகரித்துக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## அதிரடிப்படையுடன் மோதல்
## 7 சிப்பாய்கள் பலி; அதிகாரி காயம்

அம்பாறை மாவட்ட அறுசம் குடாப் பகுதியில் ரோந்து சென்ற விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன் தினம் கடும் தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தில் அதிரடிப் படையைச் சேர்ந்த எழுவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும், ஓர் அதிரடிப் படை அதிகாரி படுகாயங்களுடன் மீட்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

## மன்னார் தீவுக்குள் செல்வோர்
## இராணுவ அனுமதி பெறவேண்டும்

மன்னார் தீவிற்குள் பிரவேசிப்பதற்கு வங்காலையிலுள்ள இராணுவமுகாமில் அனுமதி பெற்றே செல்ல வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் தீவில் பெருமளவு மக்கள் ஏற்கனவே வெளியேறியுள்ளதால் அங்கு செல்லும் மக்கள் மீண்டும் வெளியே செல்வதற்கு இராணுவம் அனுமதிப்பதில்லையெனவும் அங்கிருந்து வருபவர்கள் தெரிவிக்கின்றனர்.

## சேமமடுவில் படையினர் மீது
## சுற்றிவளைத்துத் தாக்குதல்

வவுனியா மாவட்டத்திலுள்ள மாமடு ராணுவ முகாமில் இருந்து சேமமடு முதலாம் யுனிற் பகுதிக்கு வந்து தரித்து நின்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்து தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன் தினம் மாலை 4 மணி முதல் 6 மணி வரை இடம் பெற்ற கடும் மோதலில் இராணுவ தரப்பில் பலத்த இழப்புகள் ஏற்பட்டதாகவும், இதனையடுத்து இராணுவத்தினர் மாமடு

—04 ஆம் பக்கம் பார்க்க

## கட்டிடத் திருத்த வேலைகளுக்கு
## மாநகரசபை அனுமதி தேவை

அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்கள், இராணுவ நடவடிக்கைகள் விமானத் தாக்குதல்கள் காரணமாக யாழ்ப்பாண மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குறிப்பாக பெரியகடைப் பகுதியில் பாதிப்படைந்த கடைகள், கட்டிடங்கள் போன்றவற்றை மாநகரசபையின் அங்கீகாரமின்றித் திருத்தப்படுவதாக யாழ் மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மாநகர சபையில் அங்கீகாரமின்றி அமைக்கப்படும் கட்டிட வேலைகள், திருத்த வேலைகள் போன்றன சபையினால்

—04 ஆம் பக்கம் பார்க்க

### விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

## நெற்செய்கையை பாதிக்கும்
## இலைசுருட்டிப்புழுவின் தாக்கம்!

தற்பொழுது நிலவும் மப்பு மந்தாரமான சூழ்நிலையில் இலைசுருட்டிப் புழுவின் தாக்கம் பரவலாகக் காணப்படுகின்றது. இதற்கு உடன் நடவடிக்கை எடுக்காவிடின் நெற்பயிரின் இலைத்தொகுதி சேதமாக்கப்பட்டு விளைவு குன்றும் என யாழ் மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. கா குணரத்தினம் விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதன் அறிகுறிகளாக இலைகள் அரித்து வெண்மையாகத் தோற்றமளிக்கும், ஆரம்பத்தில் இதனைக் கட்டுப்படுத்தாவிடில் இப்புழு இலைகளைச் சுருட்டி உள்ளிருந்து சேதம் விளைவிக்கும். இப்பருவத்தில் இப்புழுவைக் கட்டுப்படுத்துவது சிரமமும் கூடிய செலவீனமுமாகும். எனவே இப்பருவம் வரும் வரை காத்திராமல் முதல் அறிகுறி கண்டவுடன் கீழே தரப்பட்டுள்ள மருந்துகளில் ஏதாவது ஒன்றை விசிறுமாறு

— 04 ஆம் பக்கம் பார்க்க

## இளவாலையில் அகதிகளுக்கு
## கத்தோலிக்க திருச்சபை உதவி

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கபபட்டு இளவாலைப் பகுதியில் அகதிகளாக தங்கியுள்ள சுமார் அறுநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு கத்தோலிக்க திருச்சபை உதவி புரிகிறது.

போயிட்டி, மாரிசன்கூடல், சகாயபுரம், சென். யூட், இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் தங்கியுள்ள இக்குடும்பங்களுக்கு யாழ் மேற்றாசனத்தின் மனித முன்னேற்ற நடு நிலையம் இந்த உதவிகளைச் செய்து வருகிறது (32)

## மருத்துவ பீடப் பரீட்சை
## திகதிகள் அறிவிப்பு

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுக்கு பரீட்சைகள் நடைபெறவுள்ள திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் வருட மருத்துவ பீட மாணவர்களுக்கானபகுதி இரண்டு பரீட்சை இம்மாதம் 20 ம் திகதியும், இரண்டாம் வருடப் பரீட்சை மீள எடுக்க வேண்டியவர்களுக்கு 27 ம் திகதியும் மூன்றாம் வருட பகுதி ஒன்று இரண்டு மீள எடுக்க வேண்டியவர்களுக்கு ஏப்ரல் மாதம் எட்டாம் திகதியும் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

—04 ஆம் பக்கம் பார்க்க

சந்திரசேகர்

எதிர்

கருணாநிதி

பலப்பரீட்சையின் முடிவு எதுவாகலாம்?

தமிழ்த் தேசியத் தலைமை யாருக்கு?

தமிழ் மக்கள் மனதுக்குகந்த மாவீரன் யார்?

எமது அரசியல் விமர்சகர்

க. மா. இராசையா

பதில் தருகிறார்

நாளைய முரசொலியில்!

## கீரிமலையில்
## கடற்படை
## தாக்குதல்

நேற்றுக்காலை 10 மணியளவில் கீரிமலைப்பகுதியில் நீண்ட கால இடைவெளியின் பின் கடற்படைப்படகு பீரங்

—04 ஆம் பக்கம் பார்க்க

### புதுடில்லியில் ஒருமணி நேரமாக

## இலங்கைப் பிரச்சினை குறித்து
## கருணாநிதி-இந்தியப்பிரதமர் பேச்சு

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று புதுடில்லியில் பிரதமர் சந்திரசேகருடன் ஒரு மணிநேரம் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

தனது பேச்சுகள் குறித்து பின்னர் கருத்து வெளியிட்ட முதலமைச்சர் கருணாநிதி, பேச்சுகளின்போது இலங்கைப் பிரச்சினை குறித்தே அதிக நேரம் பேசியதாக குறிப்பிட்டார். 1983 இற்கு பின்னர் இலங்கைஅரசியலில் ஏற்பட்ட பாதகமான நிலைமைகள், தமிழ் அகதிகளுக்கு வழங்கப்படும் உதவிகள் என்பனவும் பேச்சுகளின் போது பிரதமர் சந்திரசேகருக்கு தாம் விளக்கியதாக அவர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு, மாநிலஅரசு கலைக்கப்படும் எனும் ஊகம் என்பவை குறித்து எதுவுமே பேச்சுகளின் போது விவாதிக்கப்படவில்லை எனவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

### ஐக்கிய ஜேர்மனி
### தேர்தல் ஆளும்கட்சி
### வெற்றி

ஒன்றிணைக்கப்பட்ட ஐக்கிய ஜேர்மனியில் நடைபெற்ற தேர்தலில் கலாநிதி ஹெல்மட் கோலின் வலதுசாரி கூட்டணி அமோகவெற்றி பெற்றுள்ளது.

# நயினாதீவில் வாலிபரை கடற்படை கடுமையாக இம்சிப்பதாகப் புகார்

நயினாதீவுப் பகுதியில் ஸ்ரீ லங்கா கடற்படை மீண்டும் உக்கிரமடைந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இளைஞர்கள் தம் ஷேர்ட்டுக்களில் பொத்தானைச் சீராகப் போடாவிட்டாலும், அடையாள அட்டைகளிற் படங்கள் மாறுபட்டாலும் கடற்படையினர் அவர்களை நையப்புடைக்கின்றனராம்.

யாழ்ப்பாணம் வருவோர் மிகக்கடுமையாகச் சோதனை செய்யப்படுவதாகவும், பயணத்துக்கான காரணங்கள் பற்றித் துருவித்துருவிக் கேட்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (74)

## காணிஅலுவலகம் மீண்டும் இயங்கும்

யாழ்ப்பாணம் காணிப் பதிவு அலுவலகத்தை மீண்டும் செயற்பட வைக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ் மாவட்ட நீதிமன்ற வளவில் அமைந்திருந்த இவ் அலுவலகக் கட்டிடம் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சேதமடைந்தமையினால் பழைய கச்சேரிக்கும், அங்கிருந்து றக்கா வீதிக்கும், வீடமைப்பு அதிகாரசபை தனியார் விடுதிக்கும் இடம் மாற்றப்பட்டு வந்தது.

தற்போது வீடமைப்பு திணைக்கள செயலகத்தின் முதலாம் மாடிக்கு இவ்வலுவலகம் கொண்டு செல்லப்பட்டதையடுத்து உரிய ஆவணங்களை ஒழுங்கு படுத்தும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் இவ்வலுவலகம் முழுமையாகச் செயற்படும் என இவ்வட்டாரத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (66)


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரிக்கு அருகாமையில் பிரதான வீதியில் சதுரக்குடியிருப்புக் காணி எட்டே முக்கால் பரப்பு (8 ¾) முழுமையாகவோ, தெற்குத்திசையில்பாதை அமைத்துத் துண்டுகளாகவோ உடன் விற்பனைக்கு உண்டு. திருமதி ஞா. சிதம்பரப்பிள்ளை விக்னேஸ்வராக் கல்லூரி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

12015

### சேவை

மீண்டும் யாழ் நகரில் தரமான போட்டோஸ்ரற், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள் 'ஸ்கைலைன்ஸ்' 281B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். காலை 9 00 மணி முதல் மாலை 2.00மணிவரை Skylines, 281B,Clock Tower Road Jaffna (ஏஜென்சி தபாற்கந்தோர் அருகாமை)

12009.

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.(வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256 A,பருத்தித்துறை வீதி, நல்லூர், 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12027

### தேவை

சமையல்வேலை தெரிந்த ஒருவர் தேவை. விபரம் நேரில், 'நிம்மதி' சந்தை முன்பாக உரும்பிராய்.

12031


## கடமைக்கு வர போக்குவரத்து வசதி இல்லை

மானிப்பாயில் தற்போது இயங்கும் தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரி ஊழியர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் வெவ்வேறு இடங்களில் இருந்து கடமைக்கு வர வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

யாழ் போதனாவைத்திய சாலை ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாகன உதவியைப்போல தங்களுக்கும் ஏற்படுத்தித்தந்தால் தாம் எதுவித பிரச்சினைகளுமின்றி கடமைக்கு வரமுடியும் எனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். (ப11)

## தீவுப்பகுதியில் மீன்விலைகூடுதல்

புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, அனலை தீவு பகுதிகளில் என்றுமில்லாதவாறு மீனுக்கு பெருந்தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.

அப்பகுதிக் கடலில் நயினாதீவு, காரைநகர் கடற்படையினரின் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதினால் மீனவர்கள் தொழிலுக்கு செல்வதற்கு அஞ்சுவதினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. (20)

## இலங்கை வங்கி நிவாரணம்

இலங்கை வங்கி யாழ் மாவட்டத்தில் கடமை புரியும் ஊழியர்களுக்காக தலைமைக் காரியாலயத்தில் இயங்கும் நலன்புரிக் கிளையினால் 50, 000 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதில் மா, சீனி, அரிசி, பருப்பு, லக்ஸ்பிறே,தேயிலை' சவர்க்காரம் என்பன அடங்கும், (16)

## கருணானந்தசிவம் நினைவு விழா

இன்று பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் தெல்லிப்பழை ப.நோ. கூ. சங்கம் ஒழுங்கு செய்துள்ள தியாகி கருணானந்தசிவம் நினைவு விழாவும், சங்கத்தில் 25 வருடங்கள் சேவையாற்றிய ஊழியர்களுக்கான பாராட்டு விழாவும் நடைபெற உள்ளது இவ்விழாவில் பரிசு பெற்ற நாடகங்களும் இடம்பெற உள்ளது. (ப-10)

## கணக்காய்வாளர் மகாநாடு

யாழ்ப்பாணம் கூட்டுறவு உதவி ஆணையாளர் கணக்காய்வுப் பிரிவைச் சேர்ந்த சகல வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் நாளை 5-ம் திகதி புதன்கிழமை காலை 10-மணிக்கு திணைக்கள அலுவலகத்தில் மகாநாடு நடைபெறும் என்றும் தவறாது சமுகம் கொடுக்க வேண்டுமென்றும் யாழ் கூ. அ. உ. ஆணையாளர் (கணக்காய்வுப் பகுதி) மா. கஜ சபை அறிவித்துள்ளார்


COMPUTER PROGRAMMING
BASIC - LANGUAGE
வகுப்புக்கள்
புதிய பிரிவு ஆரம்பம்: 09-12-1990
உடன்நேரில் வரவும்
JAFFNA CENTRAL
ACADEMY
உரும்பிராய்சந்தி, உரும்பிராய்.
12034


## பெறுபேறுகள் இன்னும் இல்லை

க பொ. த சா. த. (1989) பரீட்சை முடிவுகள் வெளியாகி பலவாரங்களாகிவிட்ட போதிலும் கிளிநொச்சி கல்விப்பிரிவில் உள்ள பளை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 150 மாணவருக்கும் இயக்கச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச்சேர்ந்த 50 மாணவருக்கும் உரிய பெறுபேறுகள் இன்னமும் கிடைக்கவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. (74)

## பராமரிப்பு நிலைய திறப்புவிழா

தென்னிந்திய திருச்சபையால் கொக்குவிலில் நிர்மாணிக்கப்பட்ட பிள்ளைகள் பராமரிப்பு நிலையம் நாளை புதன்கிழமை காலை வண. பிதா அம்பலவாணர் அவர்களால்திறந்து வைக்கப்படவுள்ளது. (74)

## அகதிகளுக்கு வேலைவாய்ப்பு

தெல்லிப்பழை துர்க்காபுரம் தேவஸ்தானம் இராணுவ நடவடிக்கைகளால் உடைமைகள் யாவும் இழந்த நிலையில் அடைக்கலம் புகுந்துள்ள பதினைந்து அகதிக் குடும்பங்களிற்கு உணவு, உடை, உறையுள் கொடுத்து காத்ததுடன் வேலைவாய்ப்பையும் வழங்கியுள்ளது. (ப-33)

## தென்னைநாற்றுக்கள் விநியோகம்

அச்சுவேலி, வசாவிளான் வீதியில் முன்பு பட்டுப்பூச்சி பண்ணை அமைந்திருந்த இடத்தில், தென்னைப் பயிர்ச்செய்கை சபையினால் தென்னை நாற்று மேடை அமைக்கப்பட்டு, கடந்த அக்டோபரிலிருந்து பொது மக்களுக்கு கலப்பின,உன்னத இன தென்னை நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கலப்பின தென்னம்பிள்ளை சுமார் 2½ தொடக்கம் 3 வருடத்தில் பலன் தரக்கூடியது. உன்னத இனம் 5 தொடக்கம் 6 வருடத்தில் பலன் தரக் கூடியது. பொது மக்கள் கிழமை நாட்களில், பிற்பகல் 1.00 மணிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழாசிரியர் விடுதிக்கு கல்வீச்சு

களுத்துறை மாவட்டத்திலுள்ள பிரபல முஸ்லிம் கல்லூரி ஒன்றில் கல்வி கற்பிக்கும் யாழ் மாவட்ட ஆசிரியரின் கல்லூரி விடுதி இரவு நேரங்களில் அக்கல்லூரி மாணவர்களின் கல்வீச்சுக்கு இலக்காகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

அத்துடன்அங்குகல்விகற்பிக்கும்சக முஸ்லிம் ஆசிரியர்களும் இவ்வாசிரியர்களை இம்சிப்பதாலும் மிரட்டுவதாலும் தற்போதைய சூழ்நிலையில் அங்கு கடமையாற்ற முடியாமல் இவ்வாசிரியர்கள் கொழும்பில் தங்கியுள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது. (23)

## தமிழர்கள் புறக்கணிப்பு

நிருவாக சேவை ஆட்சேர்ப்பு (விருப்பத்திற்குரிய) போட்டிப்பரீட்சையில் 'ஆ' பிரிவிற்கு வடபகுதியைச் சேர்ந்த தமிழர்கள் தோற்றுவதை தடுக்க மறைமுகமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக சந்தேகிக்கப்படுகின்றது.

ஏற்கனவே 1989-ம் ஆண்டு மே மாதம் 27-ம் திகதி நடைபெற்ற நிருவாக சேவை ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சையின் 'அ' பிரிவிற்கு தோற்றி குறிப்பிட்ட புள்ளிகளுக்கு மேல் பெற்று தேறியோரே 'ஆ' பிரிவு இறுதிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

அத்தகையோருக்கு இம்மாதம் இறுதிப்பரீட்சைகள் நடைபெறவுள்ளன. அதற்கான விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதி நவம்பர் மாதம் 15-ம் திகதியாகும்.

ஆனால் 'அ' பிரிவில் தேறிய வடபகுதி விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்ப திகதிக்குப் பின்னரே அவர்களுடைய பெறுபேறுகளும், 'ஆ' பிரிவுக்கு விண்ணப்பிப்பதற்கான அனுமதிக் கடிதம், படிவங்களும் அனுப்பப்பட்டுள்ளதாம்.

இதனால் 'அ' பிரிவில் சித்தியடைந்தும் இறுதிப்பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலை வடபகுதியைச் சேர்ந்த பலருக்கு ஏற்பட்டுள்ளது

## திருடனை ஏமாற்றிய சமயோசித ஆடு

திருடனும், ஆடும் ஓடியதில் ஆடு வென்றது கச்சேரி நல்லூர் வீதியில் நிகழ்ந்துள்ள இச்சுவாரஸ்ய சம்பவம் பற்றி தெரிவிக்கப்படுவதாவது; இரவு வேளை வீடொன்றிலிருந்த சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமதிமிக்க ஆடு ஒன்றை நபரொருவர் திருடிச்செல்ல முற்படுகையில் நாய்கள் பலமாகக் குரைக்கத் தொடங்கின. வீட்டுக்காரரும் விழித்துக் கொண்டார். ஆயினும் ஆட்டை விட்டுவிட மனமில்லாத திருடன் அதனைத் துரத்திச் சென்றான்.ஆடு வீதி வழியே விரைந்துஓடிமறைந்து கொண்டது. தன் முயற்சியில் தோற்ற திருடன் பின்தலை மறைவாகிவிட்டான். (ப-7)

## வீதிகள் பாதிப்பு

சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குள் இருக்கும் மன்றத்தின் பராமரிப்பிலுள்ள பெரும்பாலான வீதிகள் பல வருடங்களாக பராமரிப்பு எதுவுமின்றி பாவனைக்கு உதவாத நிலையில் சீர்கெட்டு உள்ளன.

இதனால் இவ் வீதிகளை பொதுமக்களும் வாகனங்களும் உபயோகிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது. (ப-32)

## வீரசிங்கம் நினைவுக்கூட்டம்

நாளை 5-ம் திகதி யாழ்ப்பாணம் சிறாம்பியடிஒழுங்கையில் உள்ள யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை அலுவலகத்தில் கூட்டுறவுத்தந்தைவீரசிங்கம் நினைவுதினக் கூட்டம் நடைபெறஉள்ளது. (ப- 10)

## அதிபர் அழைக்கிறார்

யாழ் மத்திய கல்லூரியின் புதிய அதிபர் நா. க. சண்முகநாதபிள்ளை யாழ் மத்திய கல்லூரியின் மாணவர்களின் பெற்றோர்களைத் தம்மை வந்து சந்திக்கும்படி கோரியுள்ளார்.

யாழ் மத்திய கல்லூரியின் இன்றைய அவல நிலையைக் கருத்திற்கொண்டு பழைய மாணவர்களையும், கல்லூரி நலன் விரும்பிகளையும் அடிக்கடி தம்மை வந்து சந்தித்துக் கல்லூரியைக் கட்டியெழுப்புவதற்கு அயராது உழைக்குமாறும் புதிய அதிபர் கேட்டுள்ளார். (ப- 17)

## காசோலைகள் வந்தன

1989 டிசெம்பர் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் மேற்பார்வையாளர்களாகவும், நிரந்தர நோக்குநர்களாகவும் கடமை புரிந்தவர்களின் கொடுப்பனவுக் காசோலைகள் காலம் பிந்திக் கிடைத்ததனால் திகதியை நீடிப்பதற்காக யாழ் கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

தற்போது இக்காசோலைகள் திகதி நீடிக்கப்பட்டு பரீட்சைப் பகுதியில் இருந்து யாழ் கல்வித் திணைக்களத்துக்குக் கொண்டு வரப்பட்டு பாடசாலை நிர்வாகக் கிளையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் உரியவர்கள் உடனடியாக வந்து அவைகளைப் பெற்றுச் செல்லுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-17)

## கிழக்கு அகதிகளுக்கு அன்பளிப்பு

அரியாலை தெங்கு, பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் கிழக்கு மாகாண அகதிகளுக்கு வழங்குவதற்காக 10.000 ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது.

சங்கப் பணியாளர்கள் ஒருநாட் சம்பளத்தையும், அங்கத்தவர்கள் குறிப்பிட்ட தொகைப் பணத்தையும் இந்த நிதிக்கு வழங்கியுள்ளனர்.

நவம்பர் மாதச் சம்பளத்தில் இப்பணம் கழிக்கப்பட்டதாகச் சங்கப் பொது முகாமையாளர் த. புஸ்பராசா தெரிவித்துள்ளார். (17)

## மீண்டும் விரிவுரைகள்

லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் திருத்த வேலைகள் ஓரளவு முடிவுற்று விரிவுரைகள் மீண்டும் நேற்று திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறுகின்றன.

## பாரதஅட்டர்னி ஜெனரலாக தமிழர்

பாரதத்தின் புதிய அட்டர்னி ஜெனரலாக திரு. ஜி. இராமசாமி நியமிக்கப்பட்டுள்ளார். இதே வேளை பாரத பாதுகாப்பு அமைச்சக் செயலாளராக டாக்டர் அருணாசலம் உள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இது ஸ்ரீ லங்கா ராணுவத்தின் செயற்பாடுகள் பற்றிய விமர்சனம். இங்கு தெரிவிக்கப்படும் கருத்துக்கள் கட்டுரை ஆசிரியருடையவை.

# புலிகளுக்கெதிரான போர்

வடமராட்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் பின், தற்கொலைப் படையைச் சேர்ந்த கரும்புலிகளால், மேற்கொள்ளப்பட்ட நெல்லியடித் தாக்குதல் கெரில்லாப் போர் முறைக்கு நல்ல உதாரணமாகும். இது கெரில்லா யுத்தத்தின் இரண்டு அடிப்படைத் தத்துவங்களை வெளிப்படுத்துகின்றது :-

1. பாதுகாப்புப் படையினருக்கு இலக்காகாது பின்வாங்கிச் சென்று, கண்ணிவெடி, பொறிவெடி என்பனவற்றை வைத்துப் படையினருக்கு அழிவையுண்டாக்குதல். (இது வழமையான கெரில்லா யுத்த தந்திரமாகும்)
2. இராணுவ நடவடிக்கை முடிவடைந்ததும், கெரில்லாப் படையினர் திட்டமிட்டுத் தம்மை விலக்கிக் கொள்கின்றனர். பின்னர் ஆறுதலாக ஆனால் வலிமையான தாக்குதலைத் தொடுக்கின்றனர்.

வடமராட்சி இராணுவ நடவடிக்கையின் வெற்றியை இராணுவத்தினர் கொண்டாடிக் கொண்டிருக்கும் சமயத்தில் எதிர்பாராத வகையில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட நெல்லியடித் தாக்குதல் மேலே குறிப்பிட்டுள்ள கெரில்லா யுத்தத்தின் இரண்டாவது அம்சத்தைப் புலப்படுத்துகின்றது.

## நெல்லியடி, மாவிட்டபுரம்

ஒரு பிரதேசம் முழுவதிலும் தமக்கிருந்த செல்வாக்கை இழந்தாலும் அப்பிரதேசத்தின் குறிப்பிட்ட ஒரு பகுதியில் வலிமைமிக்க இராணுவத்தில் ஒரு பிரிவைத் தனிமைப்படுத்திக் தோற்கடித்துத் தம் செல்வாக்கை மீண்டும் நிலைநாட்ட முடியும் என்பதை விடுதலைப் புலிகள் நெல்லியடிச் சம்பவமூலம் நிரூபித்தனர். இராணுவம் ஒரு பிரதேசத்தை விட்டுக் கொடுக்க நேர்ந்தாலும் தம்மால் மீண்டும் போராடி நிலைத்து நிற்க முடியுமென்பதைத் தமிழ் மக்களுக்கு இதன் மூலம் விடுதலைப் புலிகள் உணர்த்தியுள்ளனர். வடமராட்சியில் தாம் இழந்த செல்வாக்கை விடுதலைப்புலிகள் மேற்படி தாக்குதல் மூலம் மீண்டும் நிலைநாட்டினார்கள். மாவிட்டபுரத்தில் இராணுவத்தினர் முற்றாக அழிக்கப்பட்டமை அண்மையில் நிகழ்ந்த இத்தகைய பிறிதொரு சம்பவமேயாகும் (இக்கட்டுரை மாங்குளம்தாக்குதலுக்கு முன்பு எழுதப்பட்டது)

## பூரணமடையாத வெற்றிகள்

பாதுகாப்புப் படையினரால் திட்டமிடப்பட்டு, நடக்கப்பட்ட யுத்தங்கள் மூலம் ஈட்டப்பட்ட வெற்றிகள் பல இவ்வாறு பூரணமடையாது போயின. இராணுவத்தினர் தனித்தனிச் சண்டையில் வெற்றி பெற்றாலும் முழுமையாக நோக்கும்போது யுத்தத்திலே தோல்வியே காண்கின்றனர் அதாவது விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து விட்டதாக, அரசாங்கம் பெருமை பேசும் போதெல்லாம் விடுதலைப்புலிகள் இராணுவத்தினரின் ஏதாவதொரு பிரிவை முற்றாக அழித்துத் தமது வலிமையை நிலைநாட்டி இதை நிரூபித்துள்ளார்கள்.

தெளிவான குறிக்கோள் அற்ற போர், இராசதந்திரமற்ற செயற்பாடுகள், அரசியல் அனுசரணையில்லாக் காரியங்கள் என்பன கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராக எடுத்த திட்டமிடப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன

வடமராட்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை இந்தியத் தலையீட்டுக்கு வழிகோலியது. இத்துடன் இலங்கை இராணுவத்தினர் போராளிகளுக்கெதிராக எடுத்த நடவடிக்கைகள் முற்றாகத் தடைப்பட்டன.

## இராணுவத்தின் தவறுகள்

போராளிகளுக்கெதிரான நடவடிக்கைகளில் இராணுவம் செய்யும் பெரிய தவறு கடந்த காலங்களில் ஏற்பட்ட பிழைகளை உணர்ந்து தன்னைத் திருத்திக் கொள்ளாமையாகும். அதாவது கெரில்லா யுத்தம் பற்றிய அறிவு பெறாமை கெரில்லா யுத்தமுறை எவ்வாறு வழமையான யுத்தத்திலிருந்து வேறுபடுகிறது என்பதை உணராமை. கெரில்லா யுத்தத்தை முறியடிப்பதற்கு ஏற்ற தந்திரோபாயங்களைக் கற்றுக்கொள்ளாமை என்பன அவற்றுளடங்கும். மேலும், நன்கு வரையறை செய்யப்படாத அரசியல் இலக்கோ ராணுவக் குறிக்கோளோ இன்றி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளால் எதிர்பார்த்த வெற்றியைப் பெறமுடிவதில்லை.

## பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்களே

போராளிகளுக்கெதிரான நடவடிக்கையென்பது பெரிதும் உளவியலடிப்படையிலானது. இறுதியான இலக்கு என்பது கிளர்ச்சிக்காரரை ஆதரிக்கும் மக்களுடைய மனமாக இருக்கவேண்டும். பாரம்பரியமான யுத்தத்தில் எதிரிகளைக் கொல்வது போலக் கிளர்ச்சிக்காரர்களைக் கொல்வதல்ல இந்த யுத்தத்தின் நோக்கம்; பொதுமக்களின் உளத்தை வெல்வதுதான் அவசியம். இக்கருத்து அடிக்கடி பேசப்பட்டபோதும் காலங்கடந்த ஒன்றாகி விட்டது பாரம்பரிய யுத்தத்தில் எதிரிகளை அழிப்பதுபோல் கெரில்லா யுத்தத்தில் அழிக்க முடிவதில்லை அவ்வாறு அழிக்க முயன்றால் பாதிக்கப்படுபவர்கள் சாதாரண பிரசைகளேயாவர். அதாவது இங்கே அரசின் குடிமக்களாகிய தமிழ் மக்களே அழிந்து போகின்றனர்; கலகக்காரர்களல்லர்.

## கத்தரிக்கப்பட்ட செடிகள்

கலகக்காரரை அடக்கும் நடவடிக்கையில் இராணுவத்தினரின் தீர்வு வழமையான யுத்தத்திற்போல முடிந்த முடிவானதல்ல திட்டமிட்ட போர்முனைகளில் வெற்றிபெற்றால் மட்டும் போதாது. விடுதலைப் புலிகளைக் கொல்வதோ அல்லது அவர்களது குழுவினரைப் பிளவுபடுத்துவதோ போதாது கெரில்லா வீரர்களைக் கொல்வதென்பது, பூஞ்செடிகளைக் கத்தரித்து விடுவது போன்றதாகும். கத்தரிக்கப்பட்ட செடிகள் மீண்டும் தளிர்ப்பதுபோல, கெரில்லா வீரர்களும் மீண்டும் வலிமையுடன் வளர்ச்சி பெறுகின்றனர்.

## பாதிக்கப்படுவோர் பொதுமக்களே

கிளர்ச்சிக்காரரை அடக்குவதற்கு குண்டு போட்டுப்பயனில்லை. குண்டு போடுவதால் பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்களேயாவர் இதனால் எந்த மக்களின் உள்ளத்தை வெல்ல அரசு விரும்புகிறதோ, அந்த மக்களைத் தன்னிடமிருந்து அன்னியப்படுத்தி விடுகின்றது பாரம்பரிய யுத்தத்தில் எதிரிகளுள் பொதுமக்களுமடங்குவர். ஆனால் கெரில்லா யுத்தத்தில் எதிரிகள் பொதுமக்கள் அல்லர் தமிழ் மக்களைப் பாதிப்பது புத்திசாலித்தனமல்ல, அவ்வாறு செய்வதன் மூலம் தமிழ் நாட்டின் உளவுணர்வு தூண்டப்படுவதுடன் இந்தியத் தலையீடு ஏற்படவும் வழிபிறக்கும்,

— ஹோஹன் குணசேகர

## முழு அளவிலான யுத்தமா?

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இது வரை கடுமையான நடவடிக்கைகளே எடுக்கப்பட்டன. வான்வெளித் தாக்குதலுடன் ஷெல் முதலிய பயங்கர ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. விடுதலைப் புலிகளின் அரண்களை உடைப்பதற்கும் சுற்றிவளைக்கப்பட்ட இராணுவ வீரர்களை மீட்பதற்கும் இத்தகைய கடுமையான நடவடிக்கைகள் ஆரம்பக் கட்டத்தில் தேவையெனலாம். ஆனால் இதனையே தொடர்வதென்பது பொருத்தமற்றது மேலும் இராணுவ உயர்மட்டத்திற்கூட பாரம்பரிய யுத்தம் ஒன்றைச் செய்வதான உணர்வை இது ஏற்படுத்திவிடும்.

## புலிகளை அடக்க முடியாது

புலிகள் குடிமக்களுடன் கலந்தே வாழ்கின்றனர். புலிகளை அழித்தலென்பது முழுத் தமிழ் மக்களையும் அழிப்பதையொக்கும்

## அரசியற்தீர்வு

சிறுபான்மையினமாகிய தமிழ் மக்களது பிரச்சினை சர்வதேச அங்கீகாரமும் அனுதாபமும் பெற்றுள்ளது. இலங்கைக்கு உதவும நாடுகள் இந்தப் பிரச்சினையின் போக்கை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளை அழிப்பதிற் கூடிய கவனமும், அரசியற் தீர்வில் ஓரளவு கவனமும் செலுத்துவதால் எதிர்பார்க்கும் முடிவைப்பெற முடியாது. ஜே. வி. பியினரை ஒடுக்கியதுபோல விடுதலைப் புலிகளை ஒடுக்கினாலும்கூட, தகுந்த அரசியற்தீர்வு காணப்படவில்லையானால் மீண்டும் தமிழர் மத்தியில் அதிருப்தியும், ஆத்திரமும் உண்டாகி (இராணுவ நெருக்கடி குறையும்பொழுது) பின்னரும்ஒரு குழப்பமுண்டாகலாம். (வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், நீதியின்மை என்பன ஒழிக்கப்படாத பட்சத்தில் மீண்டும் ஜே. வி. பி. உயிர் பெறலாம் என அரசாங்கமே ஒத்துக்கொள்கிறது.)

## மக்கள் ஆதரவு

பொதுமககளுடைய ஆதரவைப் பெறாத வரை எந்தப் பிரதேசத்தையும் அரசாங்கம் கிளர்ச்சிக்காரர்களுடைய கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துத் தன்வசம் வைத்திருக்க முடியாது. வடமராட்சியில், அரசாங்கத்தால் ஏற்பட்ட ஆட்சேதம், பொருட்சேதம் என்பனவற்றினால்தான், அப்பகுதியை மீண்டும் இராணுவம் புலிகளிடம் இழக்க நேரிட்டது.

(வளரும்)

---

# முரசொலிக்கு வந்த கடிதம்

## பிறந்த நாள் வாழ்த்து!

ஆசிரியர்,
முரசொலி:

முரசொலி நாலாண்டுச் சேவையைப் பூர்த்தி செய்வதறிந்து மட்டிலா மகிழ்ச்சியடைகிறோம்.

போர்க்காலத்திலும், புதினங்களோடு, சித்திரங்கள், சிந்தனைகள், கவிதை, கட்டுரை எனப்பல்சுவை அம்சங்கள் படைத்துச் சாதனை புரிகிறீர்கள். வண்ண வண்ணமாக வருகிறது பத்திரிகை!

வாழ்க முரசொலி!

— சூரியோதய சனசமூக நிலையம்
மாஇயம்பதி

---

முரசொலியின் பிறந்த நாளையொட்டி மற்றும் பல நேயர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்கள். அனைவருக்கும் நன்றி.

உங்கள் நல்லெண்ணமும் ஆதரவும் நெருக்கடியானதொரு காலகட்டத்தில் எமக்கு ஊன்று கோலாக நிச்சயம் உதவும்!

ஆசிரியர்

## ஒற்றர் சேவையில் பாட்டிகள்

சீனாவில் குடியிருக்கும் ஒவ்வொருவரினதும் செய்கைகளும் வெகு உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகின்றது.

பொழுது போகாத கிழவிகளை கிராமங்களில் ஒற்றர்களாக வேலைக்கு வைத்திருக்கிறது சீனஅரசு பக்கத்து வீட்டில் அரசாங்கத்துக்கு எதிராகப் பேசுகிறார்களா, அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்களா என்பதையெல்லாம் நைசாக நோட்டமிட்டு அரசுக்குச் செய்தி அனுப்பி விடுவார்கள் இந்தக் கிழவிகள்.

இப்படி சீனாவில் ஒவ்வொரு வீட்டிலும் அடுத்த வீட்டிற்குத் தெரியாமலேயே ஒற்றர்கள் இருக்கிறார்கள் முன்பின் தெரியாத ஒருவர் கிராமத்தில் அதிக நாள் தங்கினாலோ, கிராம மக்கள் சூதாட்டம் ஆடினாலோ உடனேயே அரசுக்குச் செய்தி பறந்துவிடும்.

---

‘இந்த மண் எங்களின் சொந்த மண்’

## சாந்தன் உட்பட பல கலைஞர்கள் கஸட் அறிமுக விழாவில் கௌரவம்

தமிழீழ இசைக் கலைஞர்களைக் கௌரவிக்கும் சிறப்பு நிகழ்ச்சி நேற்று முன்தினம் ‘‘வேங்கைகளின் விடுதலை வேதங்கள்’’ ஒலிப்பதிவு நாடா அறிமுக விழாவில் நடைபெற்றது.

கலைஞர்களைக் கௌரவிக்கும் முகமாக யாழ் மாவட்டத் தளபதி பானு அவர்களுக்கு அன்பளிப்புகளை வழங்கினார்.

இசையமைப்பாளர் கண்ணன், ‘‘இந்த மண் எங்களின் சொந்த மண்’’ புகழ் சாந்தன், ‘‘என் இனமே என் சனமே’’ புகழ் பொன் சுந்தரலிங்கம், ‘தூக்கமா கண்மணி’ ‘‘பால் மணம் மாறாத பிஞ்சுகள்’’ புகழ் செல்வி சியாமளா, ‘‘காற்றுக்கும் கை முளைக்கும்’’ புகழ் மிதிலா (பொன்னம்மான், யோகியின் தங்கை), ‘‘பொங்கும் கடலும்’’ புகழ் செயோன் பௌஸ்ரின், சிறகு முளைத்த குருவி’’ புகழ் குணமலர் ஆகியோருக்கும் வாத்தியக் கலைஞர்களிற்கும் இச் சிறப்புக் கௌரவம் விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்டது 70)

## தமிழக சஞ்சிகைகள் முக்கியத்துவம்

தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் தற்போது இலங்கைச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (48)

## வேலிகளும் விறகாகின்றன

வலிகாமத்தில் பல பகுதிகளிலும் விறகுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. இதன் காரணமாக மக்கள் வளவுகளின் வேலிகளிலுள்ள பூவரச மரங்களையும், சில இடங்களில் வேம்பு, மா, போன்ற மரங்களையும் கூட வெட்டுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

சில வெளி வளவுகளில் இரவோடு இரவாக எல்லைத் தடிகளையும், மரங்களையும் கூட சில விஷமிகள் திருடி விடுவதாக நில உரிமையாளர் கவலை தெரிவிக்கின்றனர். (23)

கோப்பாயில்

## திட்டமிட்ட திருட்டு

கோப்பாய் மத்திப் பகுதியில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து இரவு வேளைகளில் வாழைக்குலை திருடும் சம்பவங்கள் வழமையாகி விட்டன. கூடுதலாக கறி வாழைக் குலைகளே திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகின்றன.

அசம்பாவிதங்களினால் ஏற்பட்ட எரிபொருட் தட்டுப்பாட்டினாலும், கடும் வரட்சியினாலும் நீர்ப்பாய்ச்சலின்றி வாழைச் செய்கை பாதிப்படைந்துள்ளது ஒரு கிலோ கறி வாழைக்காய் இருபத்தைந்து ரூபாவாக விற்பனையாகும் இவ்வேளையில் வருமானமற்ற நிலையிலிருக்கும் தமக்கு இச்செயல் அதிருப்தியையும், பெருந் நட்டத்தையும் ஏற்படுத்துவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (23)

யாழ் பல்கலைக்கழகத்தில்

# மகாபொல கிடையாதோருக்கு உதவிப்பணம் வழங்க நடவடிக்கை

யாழ் பல்கலைக்கழகத்தில் பயிலும்மகாபொலபுலமைப் பரிசு கிடைக்காத மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்கப்படவுள்ளது.

வருமானம் குறைந்த,மிக வறுமை நிலையிலுள்ள மாணவர்களுக்கே இந்த உதவிப் பணம் கிடைக்கும்.

குடும்பநிலையைப் பொறுத்து மாதாந்தம் 350 ரூபா முதல் 400 ரூபா வரையிலான பணம் பத்து மாதங்களுக்கு இவர்களுக்கு உதவிப்பணமாக வழங்கப் படும்.

யாழ் பல்கலைக்கழகத்தில் 1989 90-ம் கல்வியாண்டு அனுமதி பெற்ற புதிய மாணவர்களில் உதவிப்பணம் பெறத்தகுதியானவர்களின் பட்டியல் அடுத்த வருடமளவில் வெளியிடப்படுமென பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

# க. பொ. த. பரீட்சைக்கு ஆசிரியர் ஒத்துழைப்பு இல்லை

வடக்கு கிழக்கு மாகாணத்தில் 1990 டிசம்பர் க. பொ. த சாதாரண தர பரீட்சையை நடாத்தக் கூடாது என்று தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இப்பகுதிகளில் உள்ள மாணவர்கள் அச்சமின்றி பாடசாலை சென்று கல்வி பயிலத் தொடங்கிய பின்னரே பரீட்சை நடாத்தப்பட வேண்டும் எனவும் திரு. மகாசிவம் குறிப்பிட்டார்.

அவ்வாறு பரீட்சை நடைபெறுமானால் ஆசிரியர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள் எனவும் அவ்வாறு பரீட்சை நடைபெறுமானால் கல்வி அலுவலகங்கள் முன்பு ஆசிரியர்கள் மறியல் போராட்டம் நடாத்துவார்கள் என்றும் அவர் மேலும் சொன்னார். (37)

# உள்ளூரில் மரக்கறிச் செய்கை ஊக்குவிக்க நடவடிக்கை

யாழ் குடாநாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள மரக்கறி தட்டுப்பாடுகளையடுத்து மரக்கறி வகைகளை உள்ளூரில் கூடுதலாக உற்பத்தி செய்யும் நோக்கமாக பேராதனையிலிருந்து மரக்கறி விதைகளை தருவிப்பதற்கு யாழ் மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. கா. குணரத்தினம் ஒழுங்கு செய்துள்ளார்.

இந்த விதைகளை பேராதனையிலிருந்து எடுத்து வருவதற்கு கடந்த 18-ந் திகதி தமது இலாகாவிலிருந்து சில உத்தியோகத்தர்களை அனுப்பி வைத்துள்ளதாகவும் தற்போதைய போக்குவரத்து தடைகள் காரணமாக இன்னும் வந்து சேரவில்லையென்றும் அவர்கள் வந்தவுடன் விதைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமென்றும் அவர் தெரிவித்தார். (33)


## இவரைக் கண்டீர்களா?

### பண்டிதர் கா. யோ, ஆசிநாதன்

காங்கேசன்துறை மூன்றாம் குறுக்குத்தெருவில் வசித்து வந்த இவர் காணாமற்போய் இரண்டு மாதமாகிறது.

வயது 83, நரைத்த தலை. நடு உச்சி.

இவர் பற்றித் தகவல் தருவோருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல் தரவேண்டிய முகவரி:

ஆ. யோசேப்பு,
2/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆர். ஸ்ரானிஸ்லாஸ்,
முதலியார்வளவு,
சூசையப்பர் கோவிலடி,
அச்சுவேலி.

12040



தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்

## கூட்டுறவாளர், தேசபக்தர், தியாகி கருணானந்தசிவம் நினைவு தினம் ஊழியர்களை கௌரவித்தல் வைபவம்

## அழைப்பு

காலம்; 04 - 12 - 1990 செவ்வாய்க்கிழமை (இன்று) பி. ப. 2 மணி.

இடம்: யா / இராமநாதன் கல்லூரி, மருதனாமடம், சுன்னாகம்

மாவீரர் தின நிகழ்ச்சிகளில் பரிசு பெற்ற இசை, நாடக நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

சி. சிவமகாராசா
தலைவர்
தெல்லி. ப. நோ. கூ சங்கம்

03-12-1990

12038


இப் பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி... யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 04-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# அகதி முகாம்களை பராமரிக்க அரசாங்க அதிபர் நடவடிக்கை

யாழ் மாவட்டத்திலுள்ள அகதிகள் முகாம்களை யாழ் செயலகத்துடன் அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களும் இணைந்து நிவாரண உதவிகளை வழங்கி பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ் செயலகத்தில் யாழ் அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற தொண்டர் ஸ்தாபனங்கள் உதவி அரசாங்க அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் அகதிகள் தொடர்பான விடயங்கள் பரிசீலனை செய்யப்பட்டபோதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற அரிசி, மா, சீனி போன்ற உலர் உணவுப் பொருட்களிலிருந்து இவர்களுக்கு ஒரு தொகை ஒதுக்கப்படவுள்ளது.

இதற்கென யாழ் மாவட்டத்திலுள்ள பல நோ. கூ. சங்கங்களில் விசேடமாக பொருட்களை ஒதுக்கிவைத்து தேவைப்படும் போது அகதி முகாம்களுக்கு விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

அடுத்து குழந்தைகளுக்கான பால்மா வகைகள், மருந்து வகைகள், மருத்துவ மற்றும் நிவாரண உதவிகளை ஏனைய தொண்டர் ஸ்தாபனங்கள் மேற்கொள்ளுவார்கள் எனவும் அங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள 352 அகதி முகாம்களில் எழுபத்தோராயிரம் குடும்பங்களைச் சேர்ந்த மூன்று லட்சத்து ஐம்பத்தையாயிரம் அகதிகள் தங்கியுள்ளதாகப் புனர்வாழ்வு அமைச்சின் புள்ளி விபரங்களில் இருந்து தெரியவருகிறது. (66)

உணவுக் கட்டுப்பாட்டதிகாரி தகவல்:

# கூட்டுறவுச் சங்கங்களில் பொருட்கள் உண்டு தட்டுப்பாட்டுக்கு நியாயமில்லை

இலவசமாக உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்குத் தேவையான பொருட்கள் யாழ் மாவட்டத்திலுள்ள சகல பல நோ. கூ. சங்கங்களுக்கும்வழங்கப்பட்டுள்ளன. ஆனால் பொருட்கள் பற்றாக்குறை என்று கூட்டுறவுக் கிளைகளில் சொல்வதற்கு நியாயமில்லை என்று யாழ் மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு எஸ். இன்பஜோதி நித்தியராஜ் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள புகார்களையடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சில கூட்டுறவுக் கடைகளில் அரிசி, மா ஆகிய பொருட்களுக்குப் பதிலாக பயறு பால்மா வகைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும், வேறு சில கிளைகளில் எல்லாம் பொருட்களும் கிடைக்கப் பெற்ற பின்பே விநியோகம் செய்யப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

சில கிளைகளில் இலவச விநியோகத்திற்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படாமல் பணத்திற்கு விற்கப்பட்டுள்ளது.

மேலும் இப்படியான ஒழுங்கீனங்கள் கூட்டுறவுக் கடைகளில் இடம் பெற்றால் அதுபற்றி அப்பகுதி உதவி அரசாங்க அதிபருக்கு அல்லது உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கோ அறியப்படுத்துமாறும் அவர் பொதுமக்களை கேட்டுள்ளார். (66)

ஊரடங்கு நீக்கப்பட்டதால்

# பாடசாலைகளுக்கு மாணவர் வரவு அதிகம்

கடந்த பத்துத்தினங்களாக அமுல் படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று முன்தினம் நீக்கப்பட்டதையடுத்து யாழ் மாவட்ட பாடசாலைகள் நேற்று வழமைபோல் இயங்கத் தொடங்கியுள்ளன.

கடும் மழையின் மத்தியிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் வரவு கூடுதலாக அதிகரித்திருந்ததைக் காணமுடிந்தது. (33, 12)

### இலங்கைப் ..

பிரதமருடனான பேச்சுகளைத் தொடர்ந்து துணைப் பிரதமர் தேவிலால், ஜனாதிபதி வெங்கட்ராமன் ஆகியோரையும் முதல்வர் கருணாநிதி சந்தித்து சில நிமிட நேரம் உரையாடினார்,

### கட்டிட...

அங்கீகரிக்கப்படமாட்டாது எனவும் இதனைக் கருத்திற்கொண்டு மாநகர எல்லைக்குள்கட்டிடவேலைகளையோ, திருத்தவேலைகளையோஆரம்பிப்பதற்கு முன்னதாகவே உரிய வரைபடங்களைச் சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும்படியும் அவர் அறிவித்துள்ளார். (71)

### நெற்செய்கையை...

அவர் கேட்டுள்ளார்.

மொனகுறோட பொஸ் 30 மி. லீ.—13.5லீற்றர் நீரில் என்ற வீதப்படி அல்லது பென்தயன் அல்லது குளோரிபைரிபொஸ்.

ஒரு பரப்பிற்கு 9லீற்றர் கலவையைப் பாவிக்குமாறும். தற்பொழுது மழைகாலமாகையால் இக்கலவை நன்கு செயல்பட ஒட்டும் திரவமாகிய "சேர்பெக்டன்ட்" ஐ 30. மி லீற்றர் வீதம் கலந்து பாவிக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார். (33)

### நிர்வாகச்...

கொடுத்த தொழிலாளர்களுக்கு கூலி வழங்கப்படாததால் அவர்களுடைய குடும்பங்கள் நிர்க்கதிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

சமாஜம் மக்கள் வங்கியில் இருந்து பெற்ற கடன் வட்டியுடன் ஒரு கோடி ரூபாவை எட்டியுள்ளதாகத் தெரிகிறது.

இதேவேளை சமாஜம் நிர்வகித்து வந்த கோழித்தீன் தொழிற்சாலை,ஐஸ் தொழிற்சாலை என்பன தற்போது செயலிழந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (66)

### சேமமடுவில்...

இராணுவ முகாமிற்கு பின் வாங்கிச் சென்று விட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை மாமடு இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் இளமருதங்குளம் ஊடாக ஆறுமுகத்தான் புதுக்குளம் பகுதியை அடைந்து அங்கு தரித்து நின்றனர்.

இந்த இராணுவத்தினர் மீது கடந்த வியாழனன்று மாலை 3 மணி முதல் 7 மணி வரை விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர்.

இதனையடுத்து இராணுவம் மாமடு இராணுவ முகாமிற்கு பின் வாங்கிச் சென்றது. (71)

### மருத்துவ...

யாழ் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களும் இதே வினாத்தாளுக்கே தோற்ற வேண்டும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (74)

### கீரிமலையில்...

இத் தாக்குதலையும் கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டது.

கருகம்பானை, கீரிமலை, கொல்லங்கலட்டி பகுதிகளில் குண்டுகள் வீழ்ந்தன. (48)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் ச. ஞானப்பிரகாசம்

(முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவுஅபிவிருத்தி ஆணையாளரும், யாழ் சிக்கனகடனுதவு கூட்டுறவுச் சங்க சம்மேளன தலைவரும்; யாழ் உலர்வலய அபிவிருத்தி மன்ற இணைப்பதிகாரியும்.)

நாட்டுயர்வு பெறுவதற்கு நல்ல வழிதன்னைக்
காட்டுமொரு கூட்டுறவை வளர்த்து-யாழ் நகரில்
சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கமொன்றை
ஆரம்பிக்க உதவி செய்த உத்தமனே.

கற்பூமியின் வற்சரம் தன்னை உணர்ந்து வெளிநாட்டுப்
பற்பலரையும் பார்வையிடவைத்துப் பாங்கான
கல்லுடைப்புத் திட்டத்துக்கு வேண்டும்பண உதவி
சொல்லளவில் நில்லாது பல அளவில் தந்தவரே

ஆறுமோ ஐயா மனம்! வேகுமோ உன் உடல் வெந்தீயில்!
போகுமோ நம்துன்பம்! எனினும் நின்புகழ் -
சாகுமோ நம்மை விட்டு இனி எல்லாம்
ஆகுமே கூட்டுறவால் நமக்கு

இடைக்காடு சிவசக்தி
சிக்கன கடனுதவு கூட்டுறவுசங்கம்.

12039